*கவனிக்க.- 2019.04.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2119 - 2019 අප්‍රේල් මස 12 වැනි සිකුරාදා - 2019.04.12

*2119 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 840 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 844 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2019, மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

839 - 81513 - 5403(2019/04)

# பதவிகள் - வெற்றிடம்

வண்ணாத்திவில்லு பிரதேச சபை

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்தல்

வண்ணாத்திவில்லு பிரதேச சபையில் நிலவும் வெற்றிடங்களுக்காக கீழ்க் காணப்படும் விபரங்களைக் குறித்த ஆரம்ப (தேர்ச்சி நிலை அற்ற) மற்றும் ஆரம்ப தேர்ச்சி வகையில் உள்ள பதவிக்கான வடமேல் மாகாணத்தின் மதிப்பிற்குரிய ஆளுநரால் 2008.11.19 மற்றும் 2009.05.12 ஆந் திகதிகளில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படை தகைமைகளைக் கொண்ட வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 03 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியில் நிரந்தர வசிப்பைக் கொண்ட நபர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | சேவையின் வகை | ஆட்சேர்ப்பின் தரம் | ஆட்சேர்ப்பின் அடிப்படை | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை | சம்பள முறைமை |
|---|---|---|---|---|---|
| சாரதி | ஆரம்ப தேர்ச்சி நிலை (PL -03) | III | நிரந்தர | 02 | ரூபா 25,790.00-10 X 270- 10 X 300- 10 X 330-12 X 350- ரூபா 38,990.00 |

முதன்மை கைவினை அல்லாத (பயிற்சியற்ற) சேவையாளர்கள் (சாரதி) பதவியில் உள்ள வெற்றிடங்களை 50 % வெளிவிண்ணப்பகாரர்களினாலும் 50 % உள் விண்ணப்பகாரர்களினாலும் விண்ணப்பிக்க முடியும். தகைமையுள்ள உள் விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அந்த எண்ணிக்கையிலான வெளி விண்ணப்பதாரிகளின் தகைமைகள் நிரப்பப்படவுள்ளது. வெளி விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் அந்த எண்ணிக்கையில் உள் விண்ணப்பதாரர்கள் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேலை தொழிலாளி | ஆரம்ப (தேர்ச்சி நிலை அற்ற) (PL -01) | III | நிரந்தர | 01 | ரூபா 24,250.00-10 X 250- 10 X 270- 10 X 300-12 X 330- ரூபா 36,410.00 |
| குழாய் நீர் பம்ப் இயக்குனர் | ஆரம்ப (தேர்ச்சி நிலை அற்ற) (PL -02) | III | நிரந்தர | 01 | ரூபா 25,250.00-10 X 270- 10 X 300- 10 X 300-12 X 330- ரூபா 36,410.00 |

**சாரதி பதவிக்கு அவசியமான தகைமைகள் :**

- கல்வித் தகைமைகள் :
  க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளில் குறைந்த பட்சம் (02) இரு பாடங்களில் சாதாரண சித்தியுடன் (06) ஆறு பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்ந்த) குறைந்த பட்சம் ஒரே தடவையில் (05) ஐந்து பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- வாகன சாரதியாக 3 வருட கனரக அனுபவத்தை பெற்றிருத்தல்.
- Hondor 34 இற்கு மேற்பட்ட கனரக வாகனம், கனரக டேலர் மற்றும் பேரூந்து வண்டியில் பயணிகள் 32 இற்கு மேற்பட்டோரை கொண்டு செல்வதற்கான அனுமதியை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறமை பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல். (A வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம்)
- உள் விண்ணப்பதாரர்களுக்கு, தற்போது மாகாண சபை அரசாங்க சேவையில், குறிப்பிட்ட அலுவலகத்தில் நிரந்தர சேவையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள், அனுமதிக்கப்பட்ட அரசாங்க பாடசாலையில் 8ஆ ம் வகுப்பு ( 9 ஆம் தரம்) சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**குழாய் நீர் பம்ப் ஒபரேடர் பதவிக்கு அவசியமான தகைமைகள் :**

- கல்வித் தகைமைகள் :
  க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரு (02) பாடங்களிலாவது சித்தி பெற்றிருக்க வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்ந்த)

- *தொழிற் தகைமைகள் :*
  *தொழில் நிறுவனங்கள்/மாநில நிறுவனங்கள்/வாரியம் (board) சட்ட ரீதியான நிறுவனங்கள்/குறைந்த பட்ச மற்ற நிறுவனங்களில் இருந்து 2 ஆண்டுகள் பணி புரிந்தவர் (அவர் N.V.Q. சான்றிதழ் உறுதி செய்யப்பட வேண்டும்)*

**வேலை தொழிலாளி பதவிக்கு அவசியமான தகைமைகள் :**

*கல்வித் தகைமைகள் :*
*8ஆம் தரம் (9 ஆம் வகுப்பு) சித்தி பெற்றிருக்க வேண்டும்*

**குறித்த சகல பதவிகளுக்கும் அவசியமான வேறு தகைமைகள் :**

1. சகல விண்ணப்பதாரிகளினதும் வயது எல்லை 18- 45 இற்கு இடைப்பட்டதாக காணப்படல் வேண்டும். (தற்போது வடமேல் மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிகளில் சேவையாற்றும் நபர்களுக்கு ஆகக் கூடிய வயது எல்லை கிடையாது)
2. விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவின் மூலமாக இலங்கையராக இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தை உடையவராகவும் மன ரீதியாக மற்றும் உடல் ரீதியாக ஆரோக்கியமானவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தண்டனை சட்ட விதிகளின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தண்டனை பெறாதவராதவராக இருக்க வேண்டும்.
5. வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 03 வருடகால வதிவிடத்தை உறுதிப்படுத்தி கிராம அலுவலளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழானது பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
6. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண சபையின் அரச சேவையில் சேவை புரிபவராயின் அவர் விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் திகதியில் கடந்த 5 வருட காலத்திற்குள் எச்சரிக்கைபடுத்தலை தவிர தண்டனைப் பெற்றிருத்தல் கூடாது, கடந்த 5 வருடகாலத்திற்குள் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.
7. விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்ட பின்பு அல்லது கோரப்படுகின்ற காலப் பகுதிக்குள் அல்லது குறித்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது குறித்த வெளியீட்டை செல்லுபடியற்றதாக்குதல் அல்லது திருத்தம் செய்வது போன்றவற்றுக்கான அதிகாரம் வண்ணாத்திவில்லு பிரதேச சபை செயலாளரின் உரிமையாகும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை மற்றும் உரித்தாகுகின்ற தொழிற்பயிற்சித் திறமைமையை உறுதிப்படுத்தும் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். தற்போது சேவையாற்றும் நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த உடன்படிக்கை அடிப்படையிலான சபையின் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

**சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நிபந்தனைகள் :**

குறித்த நிரந்தர பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் 03 வருட காலம் வரை தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். அக் காலப்பகுதியில் வழங்கப்படும் கடமைகளை நிறைவேற்றல், வரவு ஒழுங்கு மற்றும் நன்னடத்தை போன்றவற்றில் திருப்திப்படுத்தல் தொடர்ந்து காணப்படுவதோடு தகுதிகாண் கால முடிவில் சேவையில்/பதவியில் நிரந்தரமாக்கப்படுவர். சுற்றுநிருப நிபந்தனைகளுக்க அமைய விதவைகள் /தபுதாரர், அநாதைகள் ஓய்வு நிதியக் கொடுப்பனவுக்கான குறித்த தொகையை செலுத்த வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரம் அனுப்ப வேண்டிய ஒழுங்கு முறை :**

சகல விண்ணப்பதாரிகளும் கீழே காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019.05.06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படியாக " செயலாளர், வண்ணாத்திவில்லு பிரதேச சபை, வண்ணாத்திவில்லு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ்வரும் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டியதோடு மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்;
2. தேசிய ஆளடையாள அட்டையின் நிழற் பிரதி;
3. கல்வித் தரச் சான்றிதழ்;
4. தொழில் தேர்ச்சி திறமை/தொழில் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்;
5. பதவிக்கு உரித்தான சாரதி அனுமதிப் பத்திரங்கள்;

6. பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய கிராம அலுவலரின் சான்றுறுதிப் பத்திரம்;
7. குறித்த சாரதிப் பதவிக்கு அமைய 03 வருடங்களுக்கு மேலதிக அனுபவத்திற்கான சேவைச் சான்றிதழ்;
8. நீங்கள் தற்போது ஏதேனும் அலுவலகமொன்றில் சேவை புரிபவராயின் அவ் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட சேவைச்சான்றிதழ்.

எச்.எம்.ஐ.பீ.ஹேரத்,
செயலாளர்,
வண்ணாத்திவில்லு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வண்ணாத்திவில்லு,
2019, ஏப்பிறல் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வண்ணாத்திவில்லு பிரதேச சபை**

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடமாகக் காணப்படும் பதவிகளுக்கமைய வண்ணாத்திவில்லு பிரதேச சபையின்
........................................................... பதவிக்கான ஆட்சேர்ப்பு
(கீழ் காணப்படும் அவசியமற்ற சொற்களை வெட்டி விடவும்)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................
(தமிழில்/அங்கிலத்தில்)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..........................................................................
(தமிழில்/ஆங்கிலத்தில்)

3. முகவரி-
தனிப்பட்ட முகவரி : ..........................................................................................
அலுவலக முகவரி : ..........................................................................................

4. தொலைபேசி இலக்கம் -
தனிப்பட்ட இலக்கம் : ..........................................................................................
அலுவலக இலக்கம் : ..........................................................................................

5. பிறந்த திகதி : ...........................................................
2019.05.06 ஆந் திகதியன்று வயது:
வருடங்கள் : ...................... மாதங்கள் : ...................... நாட்கள் : ......................

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :.........................................................................

7. பால் : - (ஆண்/பெண்) : ..........................................................................................

8. கல்வித்தகைமைகள் :
க.பொ.த.(சா.த.) பரீட்சை (முதலாம்/இரண்டாம் /மூன்றாம் அமர்வுகளில்)

சுட்டெண் : ................................ வருடம்: ................................
மொழி மூலம் : ................................

| | தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|
| (i) | .............. | .............. |
| (ii) | .............. | .............. |
| (iii) | .............. | .............. |
| (iv) | .............. | .............. |
| (v) | .............. | .............. |
| (vi) | .............. | .............. |
| (vii) | .............. | .............. |
| (viii) | .............. | .............. |
| (ix) | .............. | .............. |
| (x) | .............. | .............. |

க.பொ.த. (உ.த.) பரீட்சை :
சுட்டெண் : ................................ வருடம்: ................................
மொழி மூலம் : ................................

| | தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|
| (i) | .............. | .............. |
| (ii) | .............. | .............. |
| (iii) | .............. | .............. |
| (iv) | .............. | .............. |

9. தொழில் தகைமைகள்/அனுபவம் :
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

10. தற்பொழுது பணி புரிபவராயின் அது தொடர்பான விபரம் :
நிறுவனத்தின் பெயர் : ..........................................................................................
பதவி மற்றும் தரம் : ..........................................................................................
நியமனம் பெற்ற திகதி: ..........................................................................................
தொழிற் தகைமைகள் : ..........................................................................................

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டிருக்கும் சகல தகவல்களும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும், இங்கு குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு தகவல் பிழையாக அல்லது பொய்யாக காணப்படின் ஆட்சேர்ப்புச் செய்யப்பட முன்னர் எனின் நான் தககுதியற்றவர் எனவும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னராயின் நியமனம் நிராகரிக்கப்பட முடியும் எனவும் நான் அறிவேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ................................

*12.* *நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்*
*(தற்பொழுது அரசாங்க சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கானது)*

*இவ்விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி ........................................................ அவர்கள் .............................. திகதியிலிருந்து இவ்வலுவலகத்தில் பணிபுரிகின்றார் எனவும், அவரின் வேலை, வருகை மற்றும் ஒழுக்கம் என்பன திருப்தியாக காணப்படுவதோடு கீழ்க்காணப்படும் 01 தொடக்கம் 10 வரையுள்ள தகவல்கள் அனைத்தும் அலுவலகத்தில் காணப்படும் விபரங்களுக்கு அமைய, நான் தனிப்பட்ட ரீதியில் பரீட்சித்த முறையில் சரியானவை எனவும் இவர் இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது சேவையாற்றும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் 2019 .......... மாதம் ............ஆந் திகதியன்று இவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதியளிக்கிறேன்.*

.................................................
*நிறுவனத் தலைவரின்/அவரின் பதில் உத்தியோகத்தரின்*
*கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.*

*திகதி :*................................

*04- 609*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபை**

*முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் பற்றிய துணை விதிகளின் கீழ் முச்சக்கர வண்டித்தரிப்பிடங்களைப் பெயரிடுதல்*

*மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் மூலம் 2057 ஆம் இலக்க 2018.02.02 ஆந் திகதி கொண்ட வர்த்தமானியின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்துவதற்கென மத்திய மாகாண முதலமைச்சரால் வெளியிடப்பட்ட 1955/7 ஆம் இலக்கம் கொண்ட 2016.02.23 ஆந் திகதியுடனான துணை விதிகள் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகளுக்கமைய நிருவாகப் பிரதேசத்துக்குள் பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களை 2018.07.12 ஆந் திகதிய 05.02 தீர்மானத்தின் மூலமும் 2018.12.27 ஆந் திகதிய 5.19 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலமும் அதன் பொதுச் சபைக் கூட்டங்களின் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளதென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*ஆர். எம். பீ. டபிள்யூ. எம். எஸ். பி. யட்டவர*
*தவிசாளர்*
*மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட*
*கோரளே பிரதேச சபை.*

***அட்டவணை***

*01. பஹல தென்னேகும்புர முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*02. ஹாரகம பஸ் தரிப்பிடத்தின் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*03. தென்னேகும்புர சில்வா மோட்டார்ஸ் முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*04. தேக்கவத்த சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*05. ஹாரகம 3 ஆவது மைல்கல் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*06. குருதெனிய சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*07. மஹகந்த சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*
*08. பெனிதெனிய எரிபொருள் நிரப்பு நிலையம் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்*

*09.* குருதெனிய தம்பவெல அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*10.* லெவ்ல, கொஸ்ஹின்ன அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*11.* எல்ஹேன சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*12.* மெத்தேகம சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*13.* ஜயலங்கா சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*14.* செமனேரிய சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*15.* உடுவெல வீதி சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*16.* ஹிந்தகல சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*17.* பேராதனை கம்பளை பஸ் தரிப்பிடத்தின் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*18.* ஆம்பிட்டிய மெத்தேகம 10 ஆம் கட்டை அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*19.* ஹீரஸ்ஸகல பள்ளி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*20.* போவலவத்த மைதானம் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*21.* சரசவிகம அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*22.* குட்ஹோப் சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*23.* உடபேராதெனிய கமநல சேவைகள் நிலையம் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*24.* இலுக்மோதர தலபியன்னாவ பாதை திரும்பும் சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*25.* கொழும்பு வீதி போகஹ அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*26.* அம்பிட்டிய திவுரும் போதிய அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*27.* அம்பிட்டிய 3 ஆவது கட்டை முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*28.* பிச்சமல்வத்த சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*29.* வாலமலை போகஹ அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*30.* மீகனுவ தெவன சுருவம அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*31.* மீகனுவ பஸ் தரிப்பிடம் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*32.* தம்பவெல பாடசாலை அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*33.* மாளிகாதன்ன சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*34.* ஒகஸ்டாவத்த மாரகஸ் சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*35.* வெவதன்ன சந்தி எதிரில் உள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*36.* தென்னேகும்புர நூலகம் அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*37.* ஸ்ரீ சுகதாராம விகாரை நுழைவாயில் எதிரில் அமைந்துள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*38.* ஸ்ரீ சாந்தாராம விகாரை அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*39.* சிட்டி மிஷன் சுற்றுவட்டப் பாதை அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
*40.* தேக்கவத்த முஸ்ஸிம் பள்ளிச் சந்தி அருகிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடம்

*04-218*

---

**மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபை**

*மத்திய மாகாண பிரதேச சபைகளது பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள் மற்றும் கடமைக் கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணித்தல் பற்றிய ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்*

***1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம்***

*261 ஆம் அதிகாரத்தின் கீழ் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின்*

*15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது உப பிரிவுக்கு அமையவும் பின்வரும் முன்மொழிவு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஆர். எம். பீ. டபிள்யூ. எம். எஸ். பி. யட்டவர*
*தவிசாளர்*
*மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட*
*கோரளை பிரதேச சபை*
*அம்பிட்டிய.*

*மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட*
*கோரளை பிரதேச சபை அலுவலகம்,*
*2019, பெப்புருவரி 22.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்(அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 261 ஆவது அதிகாரம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1)ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையில் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்டு மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும் 2018.09.25 ஆந் திகதிய 2090/4 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதுமான மத்திய மாகாண பிரதேச சபைகளது பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள் மற்றும் கடமைக் கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணித்தல் பற்றிய ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகளை இந்த முன்மொழிவு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்துவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2018.12.27 ஆந் திகதியன்று நடந்த பொதுக் கூட்டத்தில் 5.8 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் சபையால் தீர்மானிக்கப்பட்டது.*

*04 - 219*

---

**வில்கமுவ பிரதேச சபை**

*ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள்*
*(ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம்*

*261 ஆவது அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 93 ஆவது பிரிவு மற்றும் 126 ஆவது பிரிவின் 9 ஆவது உப பிரிவின் (அ) மற்றும் (எ) பந்திகளுக்கமையப் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கே. ஏ. ஜீ. தென்னகோன்,*
*தவிசாளர்,*
*வில்கமுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*வில்கமுவ,*
*2019, பெப்புருவரி 12.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, 261 ஆவது அதிகாரம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி*

*அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், 2013.06.28 ஆம் திகதியையும் 1816/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ளதும் மத்திய மாகாண சபையின் மூலம் (2012.05.24) அங்கீகரிக்கப்பட்டு 2013.06.28 ஆந் திகதியையும் 1816/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகளான*

***01. மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப்பொருள் முகாமை பற்றிய துணை விதிகள்***

*இந்தத் தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயற்படுத்தவும், அதற்கு முதல் நாள் நள்ளிரவு 12 மணி வரை வில்கமுவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இது தொடர்பில் செயற்பட்டு வந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் அனைத்தையும் செயலிழக்கச் செய்யவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (03) உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2019 பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதி கொண்ட சபையின் 04 ஆம் இலக்க முன்மொழிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*04 - 280*

---

**நவகத்தேகம பிரதேச சபை**

*நிறைவேற்றப்பட்ட துணை விதியினை ஏற்றுக் கொள்ளுதல்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கத்திற்காக உள்ளூராட்சி சபை (நிறைவேற்றப்பட்டதுணை விதி) சட்டம்*

*261 ஆவது அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபை (நிறைவேற்றப்பட்ட துணை விதி ) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி நவகத்தேகம பிரதேச சபையினால் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் போது 96 ஆம் இலக்க தீர்மானத்தினால் கீழ்க் காணப்படும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

எஸ். எம். ஐ. எஸ். சேனாதிபதி,
தலைவர்,
நவகத்தேகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நவகத்தேகம,
2019, மாச்சு 11.

***தீர்மானம்***

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான சட்ட) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அதிகாரமாகிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபை (நிறைவேற்றப்பட்ட துணை விதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தில் மாகாண சபை உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்டு 2015.09.25 ஆந் திகதி இலக்கம் 1933/40 இற்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட 2016.03.25 ஆந் திகதி நடாத்தப்பட்ட வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட 2016.08.03 ஆந் திகதி 1978/29 ஆம் இலக்கத்திற்கான இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் அறிவிக்கப்பட்டுள்ள பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றி நிறைவேற்றப்பட்ட துணை விதி என்ற பிரேரணையினை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற திகதி தொடக்கம் நவகத்தேகம பிரதேச சபை பிரதேசத்தினுள் செயற்படுத்துவதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் மேலே குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி சபை (நிறைவேற்றப்பட்ட துணை விதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நவகத்தேகம பிரதேச சபை தீர்மானம் விடுக்கின்றது.*

*04 - 281*

## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை

வடமாகாண பிரதேச சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத்துணை விதிகளை ஏற்றுக் கொள்ளல்

***1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத்துணைவிதிகள்) சட்டம்***

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம், வடமாகாண முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் வாகன வீதிப் போக்குவரத்து ஒழுங்கமைப்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் கௌரவ அமைச்சருமாகிய நீதியரசார் க. வி. விக்கினேஸ்வரன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2070/11 ஆம் இலக்க 2018 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட (அதிவிசேஷட) வடமாகாண பிரதேச சபைகளுக்காக அதிகாரமளிக்கப்பட்ட நியமத்துணைவிதிகள் வரைவு அத்தியாயம் 07 தொடக்கம் அத்தியாயம் 09 வரை நியமத்துணை விதிச்சட்டத்தின் 2 (2) (அ) பிரிவிற்கமைவாக வடமாகாணத்திலுள்ள வவுனியா மாவட்டத்தில் அமையப்பெற்ற வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 2018.05.09 ஆம் திகதியில் இருந்து அமுல்படுத்துவதென VSTPS/2019/2/12/150 ஆம் இலக்க 2019.02.08 ஆம் திகதிய சபைத்தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலே சொல்லப்பட்ட (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் 2 (2) ஆ பிரிவுக்கு ஏற்ப துணைவிதிகளின் வரைவில் உள்ளடக்கிய ஏற்பாடுகளை உள்ளடக்கி துணைவிதிகளை ஆக்குவதற்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 122 பிரிவு மூலமாக இத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.*

*து. நடராஜசிங்கம்,*
*தலைவர்,*
*வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை.*

*வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை,*
*நேரியகுளம் வீதி,*
*நெளுக்குளம்,*
*வவுனியா.*

*04 - 348*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.